# குருதேவர்

**இந்து மறுமலர்ச்சி இயக்க அறிக்கை-19**

உறுப்பினர்களுக்கு மட்டும் ) இ. ம. இ. பதிவு: 135/83

## தமிழிலக்கிய சிறப்பு மலர்







நவநாத சித்தர் திருவள்ளுவர்

*(சங்க காலத்தில் வாழ்ந்த புதுச் சிந்தனையாளர் என்பதனால் இவரது பாடல்கள் சங்க இலக்கியங்களில் சேர்க்கப்படுவதுமில்லை. இவரைச் சங்ககாலப் புலவராக ஏற்பதும் இல்லை. இவரைப்பற்றிய கருத்துக்களை இவ்விதழ் முதல் அறியலாம்)*

காணிக்கை ரூ. 1-00 வெளியீடு : 26-1-85

# கேள்வியும் நானே.........! பதிலும் நானே.........!

1. ஊனினைச் சுருக்கி, உள்ளொளி பெருக்கும் உண்மையினை உணர்ந்தவர்கள் தான் சித்தர்கள்'- (தர்மச்சுடர்-ஜீன் 1985 பக்கம்-39) இக் கருத்து சரியா?

பதில்; இது பொய்யான ஹிந்து மதம் கூறும் கருத்தாகும் அதாவது ஊனினை -ச்சுருக்கி' என்ற கருத்தே சித்தர்களுக்குரியதல்ல, சித்தர்களின் உண்மையான இந்து மதம் 'அடக்கு அடக்கு என்பான் அறிவிலான்;- 'அனைத்தும் தாமே அடங்கப் பெறுபவனே அருளாளன்' என்ற கருத்துக்களையே வழங்குகிறது. எனவே, இறைச்சி உணவைக் கண்டிப்பதோ, தேவையான அளவு உண்ணுமல் உணவின் அளவை சுருக்குவதே, ஐம்புலன் உணர்வுகளை அடக்கி அக வாழ்வை பாலைவன மாக்கிக் கொள்வதோ புறவாழ்வை நடைபிணமாக்கிக் கொள்வதோ பதினெண் சித்தர்கள் வழங்கிய **உண்மையான இந்து மதத்திற்கு** (The True Induiusm = **மெய்யான இந்து மதம்**) உரியதல்ல கலியும் பிறந்து 2000 ஆண்டுகளுக்கு பிறகு அதாவது இன்றைக்கு 3000 ஆண்டுகளுக்கு முன்னுல் இந்து மதம் செழுத்தோங்கிய இந்தியாவிற்குள் ஆடுமாடுகளை மேய்த்துக் கொண்டு வந்த பிற மண்ணினரான பிருமணர்களுடைய வேதமதமான **பொய்யான ஹிந்து மதத்திற்கே** (Preudo, Hinduism) உரியதாகும் எனவே சித்தர்களுடைய கருத்து என்று மேலே கூறப்பட்ட கருத்து தவருனதாகும இப்படி இந்து மதத்தைப்பற்றிய அறியாமை நிறைந்த புரியா -மை மிகுந்த, தவருன கருததுக்களை சிறுபிள்ளைத்தனமாக வெளியிட்டு இந்து மதத்திற்குச் சிதைவும் சீரழிவும், சிறுமையும செய்ய வேண்டாம் என்று அருளார்ந்த அறிவிப்பு விடுக்கப்படுகிறது.

II. [தர்மசுடர் ஜன் 1985-பக்கம் 39, சித்தர்களின் சித்தாந்தம்]
'......அனுபூதி ஞானம் பெற்றவர்களை (Mystics) என்ற ஆங்கிலச் சொல் குறிக்கும் அதுவே தமிழில் சித்தர் என்பதாகவும் சொல்லலாம்...விளக்கம்தேவை?

பதில்: ஆங்கிலச் சொல் (விலுள்ள) Mystics குறிக்கும் பொருள் சித்தர்களை முழுமையாகக் குறிக்காது, ஏனென்றுல் Mysticism என்ற தெய்விக நெறியைத் தோற்றுவித்தவர்களே இந்த சித்தர்கள் தான் அதாவது இவர்களை The creatorsor the founders of the Mysticism என்று தான் கூறவேண்டும் இதன்படி இவர்கள இந்த தெய்விக நெறியின் சிற்பியாக, படைப்பாளராக ஆகிறுர்கள்,

ஆங்கிலத்தில் Divinators என்றொரு சொல் உண்டு இதற்கு அருட் கலைஞர்கள் என்று பொருள் இந்தச் சொல் கூட சித்தர்களை முழுமையாகக குறிக்காது ஏனென்றுல் சித்தர்கள அட்டகலைகளின் தோற்றமாகவும் உள்ளீடாகவும் எல்லையாகவும் இருக்கிறுர்கள். எனவே தமிழில் உள்ள சித்தர் என்ற சொல்லை அப்படியே ஆங்கிலத்தில் Siddhar என்று எழுதி The founders of Regions and father's of all sciences and arts, Philosophy & Theology என்று தான் குறிக்க வேண்டும்.

---

KVS பிரிண்டர்ஸ், தேரடி பொன்னேரி

# திருவள்ளுவரின் கடவுட்கொள்கை

திருவள்ளுவர் பதினெண் சித்தர்கள் அடுத்த தமிழ்மொழியில் வழங்கிய இந்துமதத்தை அப்படியே முழுமையாக ஏற்றுக்கொண்டவர் எனவே, அவருடைய திருக்குறளில் அன்றைக்கு, அதாவது அவர் காலத்தில் உலகம் முழுவதும் பரவியிருந்த இந்துமதத்தின் தத்துவ விளக்கமாகவே கருத்துக்களைக் கூறியுள்ளார். இப்பேருண்மையினை உணராதவர்கள் தான் திருவள்ளுவர் காலத்திற்குப் பிறகு தோன்றிய புத்தமதம், சமணமதம், கிறித்துவமதம், வைணவநெறி........ முதலியவைகளின் கருத்துக்களை திருவள்ளுவர் கூறுவதாகத் தவறாக கருதுகிறார்கள் அதாவது, இன்றைக்கு உலகில் உள்ள அத்தனை மதங்களுக்கும் முந்தியவரே திருவள்ளுவர் இதனைத் தெளிவாக சொல்லவேண்டுமென்றால் புத்த மதத்திலும், சமண மதத்திலும் உங்களுடைட கொள்கைகளையும், கோட்பாடுகளையும், சுருக்க விளக்கக் கருத்துச் சொற்றொடர்களில் [Definitions Versions in Short Form] எழுதித் தொகுத்திடும் முயற்சி திருக்குறளைப் பார்த்துத்தான் தோற்றுவிக்கப்பட்ட ஒன்றாகும் ஏனெனில், திருவள்ளுவர் சங்க இலக்கியங்கள் போல் ஆசிரியப்பாக்களில், கலிப்பாக்களில், வஞ்சிப்பாக்களில். வெண்பாக்களில் எழுதிய நூல்களில் ஏராளமாக உண்டு. அவர் 120 வயது வரை வாழ்ந்து 120 ஆவது வயதில் தான் திருக்குறளை அரங்கேற்றினார் என்றும், அதற்குப் பிறகு வடக்கு நோக்கிப் பயணமாகி கடற்கரைக் கோயில் ஒன்றில் எட்டு ஆண்டுகள் நிட்டையில் இருந்து எண்ணற்ற தத்துவ நூல்கள் சமயச்சாரங்கள் எழுதிக் குவித்த பிறகே சித்தர்களுக்கே உரிய நிலவறை நீள்தவத்தில் நிறைந்தார். இப்படி அவர் நிலவறைக்குள் நிறைந்த இடம் திருவொற்றியூராகவோ சென்னை மயிலாப்பூர் கபாலீசுவரர் கோயில் வட்டாரமாகவோ இருக்கலாம் என்று குருபாரம்பரியம் கூறுகிறது. ஆக திருவள்ளுவர் 128 ஆண்டுகள் உயிர் வாழ்ந்திருக்கிறார் என்ற பேருண்மை குருபாரம்பரியத்திலிருந்து தெரிகிறது.

மிகத்தெளிவாக திருவள்ளுவரின் கீதை, திருமூலரின் கீதை, யக்ஞவல்லியின் கீதை, ஆதியக்ஞவல்லியின் கீதை, ஆதிக்கம்பரின் கீதை, கம்பரின் கீதை, வால்மீகியின் கீதை, ஆதிவால்மீகியின் கீதை, தன்வந்திரி கீதை, ஆதிதன்வந்திரி கீதை, கண்ணன் கீதை, கன்னன் கீதை, பெருந்தேவனார் கீதை, ஆதிப்பெருந்தேவனார் கீதை தொல்காப்பியர் கீதை, ஆதித்தொல்காப்பியர் கீதை, அகத்தியர் கீதை ஆதி அகத்தியர் கீதை, நக்கீரர் கீதை, ஆதி நக்கீரர் கீதை......... என்ற நூல்கள் சிறப்பாகப் பாராட்டப்படுகின்றன, குருபாரம்பரியத்தில், மேலும் இக்குருபாரம்பரியத்தில் மேல் குறிப்பிட்ட அனைவரும் நவநாத சித்தர்கள் என்று குறிக்கப்படுகின்றனர். அத்துடன் ஒட்டு மொத்தமாக இந்த நவநாத சித்தர்களின் கதைகளும், காதைகளும(காப்பியம்), காவியங்களும் சுவை மிக்கவை என்று பாராட்டப்படுகின்றன. ''திருமூலரையும், திருவள்ளுவரையும், சமயத்துக்கும், சமுதாயத்துக்கும் இலக்கண இலக்கியம் கண்ட தெய்வப்பாவலர்'' என்று சிறப்பிக்கும் சொற்றொடர் பத்தாவது, பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதிகளின் குருபாரம்பரியத்திலும், இலக்கியபாரம்பரியங்களிலும், அரசபாரம்பரியங்களிலும், அருள்வாக்குகளிலும் வாசகங்களிலும் வாக்கியங்களிலும பலமுறை திருப்பித்திருப்பி கையாளப்பட்டிருக்கின்றது. எனவே, திருவள்ளுவரும ,திருமூலரும், தொல்காப்பியரைப் போல் மொழிக்கும், இலக்கியத்திற்கும் இலக்கண நூல் எழுதியிருக்கின்றனர் என்று கருதவேண்டியிருக்கிறது.

திருவள்ளுவரும், திருமூலரும் பல இலக்கியங்கள் எழுதியிருக்கின்றாகள என்ற செய்தியும சித்தர்களின் நூல்கள், தாராளமாக சாணப்படுகின்றது. இவற்றின் அடிப்படையில் பார்க்குமபோது திருவள்ளுவரும, திருமூலரும் கி.மு. 9ஆம் நூற்றாண்டில் பிறந்திருப்பர் என்று எண்ண முடிகிறது. ஆனால், திருமூலரைப் பற்றி அவர் 300 ஆண்டுகள் வாழ்ந்தார் என்ற செய்தியொன்று இருக்கிறது. இச்செய்

-திக்குத் துணையாகவே குருபாரம்பரியத்தில் ''......கலியோடு கலிதீர்க்க திருமூலனும் தோன்றினன்'' என்ற குறிப்பு மிகத் தெளிவாக குருபாரம்பரியத்திலும், இலக்கிய பாரமபரியத்திலும், இருக்கிறது. இதன்படி பார்த்தால் திருமூலர் 128 ஆண்டுகளே வாழ்ந்த திருவள்ளுவருக்கு முன்பே தோன்றி அவருக்குப் பின்னும வாழ்ந்திருப்பார் என்று எண்ண வேண்டியிருக்கிறது. இதே செய்தி கலியுகத்தின் வரலாறு கூறும் சித்தர்களின் நூல்களில் மிகத் தெளிவாக இருக்கிறது. 11 வது பதினெண் சித்தர் பீடாதிபதி தஞ்சைப் பெரிய கோவிலைக் கட்டிய குருமகாசன்னிதானம சித்தர் கருவூரார் அவர்களும் அவரது மகன் கருவூரத் தேவனும், பேரன் திருமாளிகைத் தேவனும், **திருவாடுதுறையில் உள்ள திருமூலரின் நிலவறைக் குகைக்கோயிலில்** பூசை செய்த விபரங்களும் அவர்கள் திருமூலரைப் பற்றி புகழ்ந்து கூறிட்ட செய்திகளும், வாசகங்களும் குருபாரம்பரியம், இலக்கியபாரம்பரியம், மூவர்உலா அல்லது மூவர்தோற்றம், கருவறை உயர்கோபுரக் கோயில்கள் அருட்பேரரசு........ முதலிய பல நூல்களில் இருக்கின்றன. எனவே, திருமூலரின் வரலாற்றை நன்கு ஆராய்ந்தால், அதில் திருவள்ளுவரின் வரலாறு மிகத் தெளிவாகவும, திட்டவட்டமாகவும் கிடைக்கும்! கிடைக்கும்!! கிடைக்கும்!!! கருவூரார் வழிவந்த கண்டப்பக்கோட்டைச் சித்தர் உ. இராமசாமிப்பிள்ளையவர்கள் தெய்வப்பாவலர் திருமூலரையும், திருவள்ளுவரையும், தெய்வமென வழிபட்ட குறிப்புக்களும், செய்திகளும் நிறைய இருக்கின்றன. எனவே இவா மேற்படி திருமூலர், திருவளளுவர் பற்றியக் கூறும் கருத்துக்கள் ஏற்றுக் கொளளத் தக்கனவே, இவை ஏளனம்பட்டியார் வரலாற்றில் விளக்கப்படுகின்றன என்பதால் இக் கட்டுரையில் திருமூலர் காலத்தையும், திருவள்ளுவர் காலத்தையும், இவர்களின் இலக்கண, இலக்கியங்களையும் ஆராயப்போகிறவர்கள் சித்தர் ஏளனமபட்டியாரின எழுத்துக் குவியலையும் எண்ணிப்பார்க்க வேண்டும் என்று இக்கட்டுயையில் மேற்படிச் செய்திகளைக் குறித்தோம்.

சித்தர் காகபுசுண்டர் ம.பழனிச்சாமி பிள்ளையவர்கள்தான் ஓலை சுவடிகளிலிருந்து எண்ணற்ற எழுத்துக் குவியல்களை தாளில் எடுத்து எழுதினார். எனவே இவர் சித்தர்களின் நூல்களைப் பற்றிக் குறிப்பிடும போது; ''........ சித்தர்களின் நூல்களில் 'இலக்கணப்பெரும்புலவா திருமூலர்', 'இலக்கணப்பெருமபுலவர் திருவள்ளுவர்' கண்ணதேவன் போல் 2/ வண்ணங்களில் இலககியங்களைப் படைத்த திருமூலதேவனார், திருவள்ளுவதேவனா........''- என்ற சொற்றொடர்கள என்னென்ன செய்திகளை வழங்குகினறன என்பதை முறையாகவும, நிறையாகவும் ஆராய்ந்தால் தமிழிலக்கிய, இலககண வரலாறு பல பெரிய, அரிய, மாற்றங்களோடு முற்றிலும் புதிதாகவே எழுதபபட வேண்டியிருக்கும்......என்று குறிபபிடுகின்றார் -என்ற செய்தியை குறித்துக்கொள்ள விருமபுகிறோமயாம.

நவநாதசித்தர்கள் அம்மையப்பனை வழிபடுபவர்களே, அதாவது, சக்தியான பெண் தெய்வத்தையும், சிவனான ஆண் தெய்வத்தையும் பெண் ஆண் என்று வரிசைப் படுத்தி வணங்குபவர்களே நவநாதசித்தர்கள், இவர்களை ஒட்டித்தான் நவகோடி சிததர்கள். நான்மறைச்சித்தர்கள், நான்முறைச் சித்தர்கள், நான்நெறிச் சித்தர்கள், நான்வேதச் சித்தர்கள்........ எனப்படும் மற்ற 47 வகைச் சித்தர்களும் முதலில் பெண்ணையும், பிறகு ஆணையும் வணங்குகின்ற அம்மையப்பன் வழிபாட்டை, சத்திசிவன் வழிபாட்டை [சத்திலிங்க வழிபாட்டை]........ மேற்கொண்டு கடைப்பிடித்து உய்பவர்களாகவே இருக்கின்றார்கள். ஆனால் பதினெண் சித்தர்கள் மட்டும்தான் முதலில் ஆணும், பிறகு பெண்ணும் என்ற ரீதியில் '**சிவன் சத்தி**' என்ற வழிபாடாக [சிவலிங்கம் = சிவசக்திலிங்கம்] வழிபாடாக நிகழ்த்துகிறார்கள்.

—தொடரும்

---

6-ம் பக்கம் தொடர்ச்சி.........

ஒரு காலத்தில் இங்கு குருகுலம், பாசறை முதலியவை இருந்திருக்கிறது. மேலுமா நாங்கள் 15 நிமிடம தியானத்தில் அமர்ந்து விட்டு பூசைகளை முடித்து வீடு திருமபினோம்.

—மதுரை அடியான்கள்

# வணக்கவுரை

**பிறமாச்சாரியார் - சி. கவிக்குமார்**

'இந்து' - என்ற சொல் இன்று வினவுக்குரிய ஒன்று மட்டு மல்ல; விடைக்குரிய ஒன்றுமாகும், அதைக் கண்டுபிடித்து உலகுக்கு தெளிவுபடுத்த வேண்டிய காலமும் நெருங்கிவிட்டது. 'இந்து' விலிருந்து 'ஹிந்து' வந்ததா? 'ஹிந்து' 'இந்து' வந்ததா? 'இந்து' வே 'ஹிந்து'வா? 'இந்து' 'ஹிந்து' எல்லாமே ஏமாற்று? அல்லது தி.கவினர் கூறுவது போல் பாரசீகச் சொல்லா?............ ஏனெனில்; இன்று பல தமிழர்கள் 'இந்து' 'இந்து மதம்' 'இந்து நெறி' 'இந்து கோயில்கள்'...........எல்லாமே மடமை -க்கும் மூடநம்பிக்கைக்கும், ஏமாற்றுதலுக்கும், சுரண்டல்களுக்கும்.......பயன் படுத்தி வரும் சொல் என்றே நினைக்கின்றனர் ஏனெனில்; அனைவருமே இன்றைய 'இந்து மதம்' பிற மண்ணினரான பிருமணர்களின் சொத்து; அவர்களின் கருத்துக் கற்பனைக் கருவூலப் பெட்டகம் என்றே நினைக்கின்றனர். அவர்களின் கருத்துக் கற்பனைக் கருவூலப் பெட்டகம் என்றே நினைக்கின்றனர். அவர்களின் நினைப்பும் தவறல்ல! ஆனால், அனைவரும் வரலாற்றை மறந்துவிட்டே பேசியும்,எழுதியும் வருவது வருத்தத்திற்குரியது.

பிறமண்ணினரான பிருமணர் இந்தியாவுக்கு வருமுன்னரே இருப்பதுபல இலட்சம் ஆண்டுகளாக பண்பாட்டையும், நாகரீகத்தையும், ஒழுக்கவிதி முறைகளையும், வாழ்வி -யல் சமுதாயப் பாதைகளையும் வகுத்துதந்த பகுத்தறிவு அனுபவநெறி பதினெண் சித்தர்களின் சித்தர் நெறியான இந்துமதமாகும் இதையேதான் பலவாயிரம் பயனற்ற சாத்திரச் சம்பிறதாயங்களால் ஆபாசக் கதைகளால் உண்மை வரலாற்று நிகழ்ச்சிகளை புராணங்களாக மாற்றி இன்று கேலிக்கும் கிண்டலுக்கும் உரிய ஒன்றாக்கிவிட்டனர்.

எனவே, இன்றைய பெரும்பாலான தமிழர்கள், தமிழ்மொழி ஆட்சி மிகுந்த மதம் வேண்டும் என்று நினைக்கின்றனர். தமிழர்கள் அருளியல் உலகில் ஏட்டறிவும், பட்டறிவும் பெறத் தேவையான மூலங்கள் தேவை என்று விழைகின்றனர். கோயில் களிலும், பள்ளிகளிலும், நிறுவனங்களிலும், நிர்வாகங்களிலும் தமிழுணர்வு மிக்க ஆத்திகம் மணங்கொண்ட ஆன்மீக வல்லுனர்கள் அதிகாரங்களுக்கு வரவேண்டும் என்று விழைகின்றனர். அவர்களுக்காக உள்ளதுதான் பதினெண் சித்தர்களின் நெறி யான இந்துமதமும்: இந்த இயக்கமும் அதன் கிளைகளும், அடியார் திருக்கூட்டமும், பிருமணர்களின் போலியான கூட்டத்தின் ஆதிக்கத்தை எதிர்க்கத் திராணியும் திக்கு மற்றுமிருக்கும் பகுத்தறிவாளர்களுக்கென்றே தனிப் பாசறைகளும், பாடிவீடுகளும் இவ்வியக்கத்தில் உண்டு! பலபேர் 'இந்து' என்று கேட்டவுடனே எதிர்க்கின்றனர் கொதித்தெழுகின்றனர். அது தேவையற்ற ஒன்று! ஏனெனில் 'இந்து' என்னும் சொல் தமிழ் சொல்லே! இதை அவர்கள் உணர்ந்து ஏற்றால்தான் குறைந்தது தமிழரகளையா -வது தமிழக எல்லைக்குள்ளாவது ஒன்று திரட்ட இயலும். பொருளாதார உணர்வு, புரட்சி உணர்வு, போராட்ட உணர்வு, பகுத்தறிவு உணர்வு, தமிழியுணர்வு........யும் மங்கியும், மறைந்தும் வீணடிக்கப்பட்டும் போன ஒன்றாகும் எனவே நமது சிந்தனையும் செயலபாடும் நமது காலத்திலாவது சிறிதேனும் வெற்றிபெற வேண்டும் என்று விரும்பினால் இயக்கங்கள், கழகங்கள், மன்றங்கள், அமைப்புகள், புரட்சிப்படைவீடு கள்...... யாவும் ஒனறிணைய வேண்டும். எதிர் வரும் ஒடுக்கச் சத்தியை எதிர்த்து போராடிட வழிவகைக்க வேண்டும். அவ்வழி அமைக்க எப்போதும் இந்து மறுமலர்ச்சி இயக்கம் தயாராக உள்ளது.

---

தொகுத்து வழங்குபவர்:- தலைமைப்பொறுப்பாளர்- சி. கவிக்குமார் B. Sc.,
56 N G O காலனி, பொன்னேரி-601 204.

# சித்தர்கள் வாழும் "குப்பல் நத்தம் கிராமம்"

## [மதுரை நகர அடியார்களின் பயண விவரம்]

மதுரைக்கு அருகில் 'குப்பல் நத்தம்' என்னும் கிராமம் சித்தர்கள் பலர் பல காலம் தங்கி வழிபட்ட இடம் என்றும்; குருதேவர், ஞானகுரு சித்தர்கருவூரார் அவர்கள் தமது வாழ்வின் சிலகாலத்தை செலவழித்துள்ள சிறப்புக்கும் பெருமைக்கும் உரிய இடம் என்பதை உணர்ந்தும் அங்கு பயணப்பட சித்தமானோம்

மதுரையிலிருந்து உசிலம்பட்டி சென்று அங்கிருந்து மாற்றுப் பேருந்தில் சேடப்பட்டி' என்னும் கிராமத்திற்கு சென்று அங்கிருந்து ''குப்பல் நத்தம்'' கிராமத்திற்கு நடந்து சென்றோம். அந்த ஊருக்கு அருகில் உள்ள ஒரு சிறிய மலையில் தான் சித்தர்கள் கோயில் அமைந்துள்ளது (சமணர் கோயில்) என்று மக்களால் அழைக்கப்படுகிறது காரணம் அங்குள்ள சிலைகள் மொட்டையடித்துக் கொண்டு நிர்வாண நிலையில் உள்ளது. (ஆண்சிலையும், பெண்சிலையும் அவ்வாறு உள்ளது) இந்த மலைக்கு 'குப்பல் நத்தம்' கிராமம் செல்லாமல் சேடபட்டி என்ற இடத்திலிருந்து நேராக மலைக்குச் செல்லலாம் முதலில் அங்கு சென்று பூசை செய்தோம் அருளுலகப் பட்டங்களைக் கூறி எங்களை அறிமுகப்படுத்திக் கொண்டோம்.

பின்னர் எங்களை நாங்கள் அறிமுகப் படுத்திக் கொண்டு குன்றின் மேல் கோயில் அமைந்துள்ள இடத்திற்குச் சென்றோம். அக்கோயிலின் அமைப்பு பின் வருமாறு: வடக்கு நோக்கியபடி தாத்தாவின் சிலையும்: அருகில் இருபுறமும் ஆத்தாக்களின் சிலையும் உள்ளது. இது போல் நான்கு உள்ளது. ஒவ்வொன்றிலும் மூன்று சிவலிங்கம் உள்ளது. ஆக மொத்தம் பன்னிரண்டு இருந்தன இந்த சிற்பங்களில் உள்ள பெண்கள் அனைவரும் நிர்வாண நிலையில் உள்ளனர். இதற்கடுத்த மூன்று நிர்வாண பெண்களின் சிலையும்: இடது புறம் பாறையில் ஓம்' என்றும் உள்ளது: அருளூற்று ஒன்று முன்பு இருந்ததற்கு அடையாளமாக சிற்பங்களுக்கு முன் வலது புறத்தில் தொட்டி போன்ற அமைப்பு ஒன்று உள்ளது.

இந்த சிற்பங்களுக்குப் பின் புறம் (தென் திசையில்) நீண்ட குகை ஒன்று உள்ளது. என்றும்: குகைக்குள் எல்லா தாத்தாக்களும்; ஆத்தாக்களும் நீண்ட ஆழ்ந்த தியானத்தில் உள்ளனவென்றும்; குருபாரம்பரியக் குறிப்பு காணப்படுவதை அறிந்தோம் மேலும்; அக்குகையில் அரிய பெரிய மூலிகைகள் இருக்கின்றன என்றும் அறிந்தோம். பிற்காலச் சோழப் பேரரசு காலத்தில் மக்கள் அனைவரும் பயன்படுத்தும் வகையில் மூலிகைகள் மலையைச் சுற்றிக் காணப்பட்டதாக அறிந்தோம்.

செத்தாரையும் எழுப்பும் மூலிகைகள் அங்கு இருந்துள்ளன என்று பதினோராவது பீடாதிபதி குறிப்புகளின் மூலம் அறிந்து ஆராய்ந்தோம். அவையாவும் 12-வது பதினெண் சித்தர் பீடாதிபதி அவர்களின் அருளாட்சியிலே தான் அடையாளம் காட்டப்பட்டு மீண்டும் உலகமக்களுக்கு பயன்படும் என்று பூசையின் மூலம் ஞானக்காட்சியின் மூலம் அறிந்தோம்.

இங்கு பூசையிலும், தவத்திலும் மோனத்திலும் ஈடுபட்டிருக்கும் தாத்தாக்கள் அனைவரும் சித்துக்கள் விளையாடிடும் மலையாக இதைப் பயன்படுத்தியிருக்கின்றனர் (இவர்கள் தாந்தரீக பூசைக்கும் இம்மலையைபயன்படுத்தியிருக்கிறார்கள் இம் மலைக்கும் பொதிய மலைக்கும் இளமுரியா கண்டத்து தென் இமய மலைக்கும் தொடர்பு உண்டென்பதை அறிந்தோம் முழுநிலவு நாளில் பூசைகள் இங்கு சிறப்பாக இன்னமும் நடந்து வருவதை அறிந்தோம் மொத்தத்தில் அந்த இடம் இயற்கை வளமும் அருளுலக முக்கியத்துவமும் உடையதாகவே தோன்றியது

4-ம் பக்கம் பார்க்கவும்

# அன்புள்ள சேவுகனுக்கு.........!

அன்புச்சேவுக!

யாம், அன்னியர்களுக்கு மட்டும் புதியவனுக இல்லாமல்: நம் தாயகத்துக் மக்களுக்கும் புதியவனுகவே உள்ளோம். ஆனுல். இந்த எமது சொந்தநிலை: நமது இயக்கத்துக்கும் தொடர்ந்து வந்து விடக்கூடாது என்பதால்தான்; இந்த ஆண்டு 1985-இல் டிசம்பர் 24, 25 இல் மதுரை மாநகரில் மாநில மாநாடு கூட்ட முடிவு செய்துள்ளோம்.

நம்மிடம் அருளுலக ஐயங்களை அகற்றிக் கொள்ளவந்த ஆர்வலர் முதல்: நமது அருட்பணியால் நலமடைந்தோர் வரை அனைவரையும் சித்தரடியான். சித்தரடியார், சித்தரடியாள்........... என்று எண்ணற்று உருவாக்கி அருளுலக இளவரசர்களாக, அருட்படைத் தளபதிகளாக. அருட்சேனை வியூகநாயகங்களாக, அருட்படையின் மாவீரர்களாக நாடுமுழுவதும் சென்று செயல்படச் செய்தும்......... நம்மால் நன்மை யடைந்தவர்கள் கூட நமக்குத் துணையாக வராத நிலையே உருவாகிவிட்டது இது வருந்தத்தக்கதே.

உடனடியாக, நாம், நமது வரலாறு, தத்துவம், கொள்கை, குறிக்கோள், செயல்திட்டம்......... முதலியவைகளை படித்தவர் முதல் பாமரர் வரை புரித்து கொள் ளுமளவுக்கு நமது பணிகளனைத்தும் நமது அச்சிட்ட அறிக்கைகளையும் அறிவிக்கை களையும், குருதேவர் ஏடுகளையும் விற்பதில் முனைவதாக இருக்கவேண்டும் நண்ப!

நாத்திகர்கள், மதமறுப்பாளர்கள். பகுத்தறிவுவாதிகள்......... நமது மதத்தின் செயல்நிலைகளையும், தத்துவங்களையும் அநாகரிகமானவை, காட்டுமிராண்டித்தன மானவை, ஆபாசமானவை......... என்று குறைகூறிக் குற்றம் சாட்டுகின்றனர்கள். இதற்குப் பதில் கூறத் தெரியாமல் பலகாலமாக நமது மதவாதிகள் திகைத்துத் திக்குமுக்காடித் திணறித் தேங்கியுள்ளார்கள்

இந்துமதம், அநாகரீகமாக வாழ்ந்த ஆதிமனிதனை வளப்படுத்த படைக்கப்பட் டதே ஆகும் மனிதன் ஆடை அணிகலன், வாழிடம்......... முதலிய வசதிகளில்தான் நாகரீகம் அடைந்தவனுக உள்ளானே தவிர, அவனது சிந்தையும், நெஞ்சும். உணர் வும், எண்ணமும் வேட்கையும்......... காட்டுமிராண்டி நிலையிலேதான் இருக்கின்றன. எனவேதான். மனிதனின் அகப்பண்புகளைத் திருத்திச் செம்மைப் படுத்தும் மதமான இந்துமதத்தில் ஆரம்ப காலத்திலிருந்த பல நெறிமுறைகளும், விதிகளும், பழக்க வழக்கங்களும் தொடர்ந்து கையாளப்படுகின்றன இந்துமதம் மிகமிகத் தொன்மை யானது, பழமையானது......... என்பதை விளக்குவதாகத்தான் இந்து மதத்தில் நடைமுறைகள் கருத்துக்கும், கண்ணோட்டத்துக்கும் அப்பாற்பட்டு விளங்குகின்றன. இந்துமதத்தின் நடைமுறைகள் கசப்பான மருந்து போன்றவை. இவைதான், அருளை ஊற்றெடுக்கச் செய்கின்றன அருளை அனுபவப் பொருளாக வழங்குகின்றன. இந்து மதம் மனிதர்களைத் தூய்மையும், வாய்மையும்........... அடையச் செய்யும் பேராற்றலுடையவை!

—இவ்வுண்மையை ஏற்று ஒவ்வொரு இந்துவும் தன்மானத்தோடும், தன்னம் பிக்கையோடும் தனது இந்து மதத்தை வளவளர்ச்சியும், மறுமலர்ச்சியும் அடையப் பாடுபட முன்வரவேண்டும். இதற்கான வழிமுறைகளும். நடைமுறைகளும் தெளிவானத் திட்டங்களும் எம்மிடம் இருக்கின்றன.

வாருங்கள்! சிந்திப்போம்! செயல்படுவோம்!

அன்பு,

ஞாலகுரு சித்தர் கருவூரூர்

# அருட்கேணி நீர் குவளைகள்.........!
# தமிழின மறுமலர்ச்சிப் போர்-2

எல்லா நாயன்மார்களும், ஆழ்வார்களும், புரட்சி வீரர்களாக, சமுதாயத் தொண்டர்களாக, மொழிப் போர் இயக்கத் தலைவர்களாக பண்பாடும் நாகரீகமும் காத்த மாவீரர்களாக கற்கோயில்கள் கண்ட கலைஞர்களாக, சொற்கோயில்களமைத்த மேதைகளாக பேரறிஞர்களாக விளங்குகிறார்கள் ஆனால், தந்தை பெரியாரின் ஆத்திரமான அவசரக்கோலச் சீர்திருத்தப் பணிகளால் நாயன்மார்களும் ஆழ்வார்களும், தொகையடியார்களும் மடமை வாதிகள், பழமை வாதிகள் ஆரிய அடிவருடிகள்.........என்ற கருத்துக்கள் இருள் போல் தமிழின எழுச்சி வரலாற்றில் கவிழ்ந்து விட்டன. இவற்றை எப்பாடுபட்டாவது, நேரடியாகவே பெரியாரை விமர்சனம் செய்தாவது நலமாக்க வேண்டும்; இருளை அகற்ற வேண்டும். பெரியாரால் விளைந்த தீமைகள், தவறுகள், பிழைபட்ட கருத்துக்கள் வரலாற்றுக் குழப்பங்கள் கண்டிக்கப்பட்டேயாக வேண்டும். இல்லாவிட்டால் நமது பணிகள் கடலில் பெருங்காயம கலந்ததுபோல் மணமின்றி வீணாகிடும்: உரிய பயனளிக்காமல் போய்விடும்.

நண்பா! தந்தை பெரியார் ஒரு படைப்பாற்றல் மிக்க மேதை (a creative genius): அதனால்தான் அவர் சமுதாய விழிச்சிக்காகத் தனிநபர்களையும் உறக்கத்திலிருந்து தட்டியெழுப்பம் பல போராட்ட திட்டங்களை ஈன்றெடுத்திட்டார். ஆனால், அதற்காக அவருடைய செயல்கள் அனைத்தையும் கண்ணை மூடிக்கொண்டு ஆதரிக்க வேண்டுமென்பது அவசியமில்லை. அதே நேரத்தில் ஆரம்ப காலத்திலிருந்து பலர் கண்ணை மூடிக்கொண்டு எதிர்த்து வந்தது போல் நாமும் எதிர்க்க வேண்டும என்பதும் அவசியமில்லை. இவரது படைப்புத் திறத்தால் பல்வேறு பாதுகாப்புகள் நமது இனத்துக்கும், மொழிக்கும் நாட்டுக்கும ஏற்பட்டுள்ளன. அதே நேரத்துச் சில பயனற்ற தேவையற்ற முடிவுகளும் இவரால் பல துறைகளில் ஏற்பட்டுள்ளன. இவற்றை எண்ணியே நாம் நமது கருத்துக்களைக் கூற வேண்டியவர்களாக இருக்கிறோம்.

தந்தை பெரியார் ஒரு கண்டுபிடிப்புத் திறனுடைய பேரறிஞர். (Mr. E.V.R. is an inventive spirited genius) இவர் மொழியைப் பற்றியும், சட்டம் பற்றியும் (His new ideas in the field of language and law......) கூறிய புதிய கருத்துக்கள் சுவையுடையவையே தவிர பாரம்பரிய பண்பாடுகளையும் மரபுகளையும் மிகுதியாகப் பாதிக்க கூடியவையேயாகும் [......These ideas are new, and interesting, but these are harmful and dangerous to our ancient culture and Traditious.....] சமுதாயச் சீர்திருத்தம் என்ற பெயரால் இவர் சமுதாய மரபுகளையும் சட்டங்களையும், கட்டுப்பாடுகளையும் பிற பழக்க வழக்கங்களையும் மிகமிக கடுமையாகவும் நாகரிகம் கடந்தும விமர்சித்தவைகளால் பல பயங்கரப் பேரழிவுகளும, இழிவுகளும் சிதைவுகளும் முறைகேடுகளும் குழப்பங்களும் தேக்கங்களும.........விளைந்திட்டன அதனால் அதற்கெல்லாம் பரிகாரம் தேட வேண்டியவர்களாக இருக்கின்றோம் நாம்

-தொடரும்



# இந்தியாவில் மார்க்சீயம்-2

—சித்தர் கருவூரர்—

சென்னிமார்ச்சு மற்றொரு விழியாக இருந்து செயல்பட்டு உலகத் தத்துவமான மார்க்சீயம் வலிவோடும், பொலிவோடும் உருப்பெற பின்னப்பட்ட நூலென இணைந்தவர் தோழர் 'பிரடெரிக் எங்கல்சு' இவரும் மார்க்சு பிறந்த மாநிலமென 'ரைன்' மாநிலத்தில் 'பார்மென்' நகரில் செல்வக் குடும்பத்தில் பிறந்தார். அவரின் பிறந்த நாள் 28-11-1920 ஆகும். இவரும் மார்க்சைப் போலவே சமுதாயப் பிரச்சினைகளைக் கண்ணுற்றார் மனம் வெதும்பிய இவர் சமுதாயக் கொடுமைகளை நீக்கி பரிபூரண சக சுக வாழ்வைத்தர ஓயாமல் சிந்தித்து வந்தார். அப்படிப்பல சிந்தனை செய்து பலகட்டுரைகளைப் பத்திரிக்கை வாயிலாக வெளியிட்டுக் கொண்டிருந்த நேரத்துத்தான் 'மார்க்சோடு' தொடர்பு ஏற்பட்டது. இத்தொடர்பு இவரை வரலாற்றில் தவிர்க்க முடியாத ஒரு 'தோழன்' என்ற நிலைக்கு உயர்த்தியது.

1841-ஆம் ஆண்டில் 'கோலோன்'1 (பிரசியா) நகரத்திலிருந்து வெளிவந்து கொண்டிருந்த 'ரீய்ன்ச் சூய்டுங்'2 என்ற பத்திரிக்கையில் 'மார்க்சு' பிரசிய அரசு சட்டமன்ற நடவடிக்கைகளை விமர்சித்து கட்டுரைகளை எழுதி வந்தார். அதே பத்திரிக்கையில் எங்கல்சும் கட்டுரைகளை எழுதி வந்தார். இதனால் இரண்டு பேரும் பலமுறை கடிதத் தொடர்பு கொண்டனர். எங்கெல்சு 1841-ஆம் ஆண்டு நவம்பர் மாத பிற்பகுதியில் இங்கிலாந்து செல்லும் வழியில் 'கோலோன்' நகரத்தில் மார்க்சின் அலுவலகத்தில் சந்தித்தார், அச்சந்திப்பு அவ்வளவு தூரம் திருப்திகரமாக இருக்கவில்லை என்றே கூறலாம்.

மீண்டும் கார்ல் மார்க்சைப் பாரீசில்3 சந்தித்துப் பத்து நாட்கள் (28-8-1944 to 6-9 44) தங்கிப் பழகினார் எங்கல்சு இச் சந்திப்பு ஒரு மாபெரும் நட்பிற்கும் கூட்டு விஞ்ஞானப் பணி தொழிலாளர் நலனுக்காக புரட்சி கரமான கூட்டுப் போராட்டம் .........ஆகியவற்றிற்குமான துவக்க நிலையாக இருந்தது.

மார்க்சு, பிரான்சை விட்டு வெளியேற்றப்பட்டு விட்டப்பின்னர் 'பிரசெல்சு' வந்து சேர்ந்தார். 1845 ஏப்ரலில் 5-க்குப் பின்னால் மார்க்சுடன் சேர்ந்திருக்க எங்கெல்சு வந்தார் இவ்விருவரும் கூட்டுச் சேர்ந்து பலநூல்களையும் கட்டுரைகளையும் வெளியிட்டனர். இருவரும் 1846 கோடைக் காலம் வரை பெரிதும் முயன்று 'செர்மன் சித்தாந்தம்' என்ற நூலை எழுதினார்கள் இவர் எழுதிய கட்டுரைகளில் 'விமர்சனம்' என்ற சொல் பற்றி தெளிவான உரையை எழுதியுள்ளார்.

அதாவது விமர்சனம் தொடுக்கப்பட்டுள்ள சங்கிலியிருந்து கற்பனைப் பூக்களைப் பிய்த்து எறிந்து விட்டது.........எனவே இனி மனிதன் சங்கிலியைத் தகர்த்து எறிந்து விட்டு உயிருள்ள மலரைப் பறிக்க முடியும்''—என்று எழுதினார். மேலும் இந் நூலில் எங்கெல்சு மார்க்சின் மாபெரும் கண்டு பிடிப்பான 'பொருள் முதல் வாதம்' சமுதாயத் தீர்வுகளை விஞ்ஞான மாக்கியுள்ளது என்று தெளிவுபட கூறியுள்ளார். இதைத் தொடர்ந்து இவர்களிருவரும் பல்வேறு நாடுகளிலும் உள்ள தொழிலாள வர்க்கச் சோசலிசுட்டு இயக்கத்தின் முற்போக்கான பிரதிநிதிகளைக் கொள்கையடிப்படையிலும் குறிக்கோள் அடிப்படையிலும் ஒன்று திரட்டி 'கம்யூனிசக் கடிதப் பரிமாற்றக் குழு'—என்ற ஒன்றை அமைத்தனர். இதைத் தீவிரப்படுத்தக் 'கார்ல் மார்க்சு' தன் நண்பர் 'எங்கெல்சை 1846-ஆம் ஆண்டு ஆகசுட்டு 15-ஆம் தேதி பாரிசுக்கு அனுப்பினார் அவர் சூன் 15ஆம் தேதி முடிய அங்கு தங்கினார். அங்கிருந்தே இலண்டனில் நடந்த 'கம்யூனிசிட் லீகின்' முதல் மாநாட்டுக்குச் சென்றிட்டார் பிறகு பிரசெல்சுக்கு ஆகசுட்டு மாத இறுதியில் திரும்பினார். தொடரும்

# இந்துமத-ஹிந்துமத விளக்கக் கட்டுரைத் தொடர்-2

இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் இம் மாபெரும் பணிகளைக் கட்டுக் கோப்பாகப் பிருமணர்களும், பிருமண அடிமைகளும், ஆர்வலர்களும், ஆதரவாளர்களும், பிருமண மாயையில் உழலும் அப்பாவிகளும், இருட்டடிப்புச் செய்கிறார்கள்! இருட்டடிப்புச் செய்கிறார்கள்!! இருட்டடிப்புச் செய்கிறார்கள்!!! இதுவரை வெளியிட்ட கோடிக்கணக்கான அறிக்கைகளும், ஓடி மறைந்த மாயமென்ன? தேடிப் பயனைத் தரமுடியாத காரணமென்ன? என்றெல்லாம் எண்ணி எண்ணிக காலத்தை வீணாக்குவதைச் செய்யாமல், தொடர்ந்து நம்பிக்கையோடு கொந்தளிக்கும் கடலின் நெடிய தொடரலைகள் போல், சித்தர்நெறிச் செல்வர்கள் பேச்சாலும், எழுத்தாலும், செயலாலும், மெய்யான இந்துமதத்தை விளக்கியுணர்த்தி நிலை நாட்டிட ஆரம்பித்து விட்டார்கள். அதன் ஓர் அங்கமே இந்தக் கட்டுரை.

பதினெண் சித்தர்கள் தாங்கள் உருவாக்கிய வழிபாட்டு நிலையங்களில் (48 வகை) எந்தெந்த வழிபாட்டு நிலையங்களில் மட்டும் ஒன்பது கோளகளும், பீடம் அமைக்கப் பெற்று வழிபடு நிலை பெறலாம என்ற ஆகம விதியை, சுருதி மறையை ஆரண முறையை, மீமாம்சை நெறியை, வேத ஏந்துகளை...... வகுத்துச் சென்றிட்டாரகள் அதன்படி, **ஒரே நேர் கோட்டில், ஒரே திசையைப் பார்த்து** ஒன்பது(9) கோள்களும்,[ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன, வெளளி சனி, இராகு, கேது.] ஒரே பீடததில் அமர்ந்து அருள்வழங்கும், அருளாட்சி அரியணை அமைக்கும் சட்டம செய்யப்பட்டது. ஆனால், சூழ்ச்சியும், சூதும், வாதும், வஞ்சகமும், சுரண்டலும், ஏமாற்றும், மோசடியும்...... செய்யும், துணிச்சல் மிகக பிருமணர்கள் இந்த அருளாட்சி அரியணைச் சட்டத்தையே உடைத்தெறிந்து விட்டு ஒன்பது(9) கோள்களையும, பல திசைகளைப் பார்த்துக்கொண்டு நிற்கக் கூடிய கூட்டமைப்புப் பீடமாக மாற்றினார்கள், அத்துடன் பொதுமக்களின் சௌகரியத்துக்காக என்று கூறிப் பதினெண் சித்தர்களின் ஆகமவிதிகளை மீறித் தங்களுடைய விருப்பம்போல அனைத்து வகையான வழிபாட்டு நிலையங்களுக்கு உள்ளும் புறமும், நினைத்த இடத்தில் ஒன்பது கோள்களுக்கும், பீடம் அமைத்தார்கள்.

இதனால் பதினெண் சித்தர்கள உருவாக்கிய அருள் நிலையங்கள் அனைத்தும் பாழ்பட்டன. செயலிழந்தன அதனால், பிருமணர்கள் தங்கள் விருப்பம்போல் பூசாரியாக, குருக்களாக, பண்டாரமாக, தேசிகராக, ஓதுவராக, பட்டராக...... மாறிககொண்டார்கள்! மாறிக்கொண்டார்கள்!! மாறிக்கொண்டார்கள்!!! அதாவது, அருளூற்றுக்கள் அடைப்பட்டதால பிருமணர்கள் அச்சமோ, கூச்சமோ இன்றி, மெய்யான இந்து மதததிற்குரிய வழிபாட்டு நிலையங்களைக் கைப்பற்றிப் பொய்யான ஹிந்து மதத்திற்குரியதாக ஆக்கிவிட்டாரகள். இப்படிப் பிருமணர்கள் **அருளுலகத்தின் கோட்டைகளான** வழிபாட்டு நிலையங்களைக் கைப்பற்றிக் கொண்டு விட்டதால் அருளுலகில், தங்களின வேதமதமான ஹிந்து மதத்தை மிக வேகமாகப் பகுததிச் செல்வாக்குப் பெற்றிட்டார்கள், எனவே, இந்துக்களும், பிருமணர்களின் சமசுக்கிருத மொழிதான் அருளாட்சிமொழி என்று நமபி ஏமாந்தார்கள். பிருமணர்களின் ஆபாசக்கதைகளையும், அண்டப்புளுகுகளையும், காட்டுமிராண்டிக் கற்பனைகளையும், நம்பி மோசம் போனார்கள். சமசுக்கிருத மொழியிலேயே தங்களது பூசைகளையும், சடங்குகளையும், பிறவற்றையும் செய்து அருளுலகக் குருடர்களாக மாறினார்கள். இதனால் பிருமணர்கள் மெய்யான இந்துமதத்தை ஒழிப்பதற்குத் தேவையான கூலிகளையும், போலிகளையும், துரோகிகளையும், கங்காணிகளையும், அப்பாவி அடிமைகளையும், மிக எளிதில் உருவாக்கி விட்டார்கள்!

—தொடரும்

# இராமலிங்க அடிகளார் பற்றிய புதிய கண்ணோட்டம்

வடலூர் வள்ளல் பெருமான் சென்னை கந்தகோட்டம் மயிலம் கோயில், திருவொற்றியூர் கோயில். காஞ்சிபுரம் கோயில் என்று வடக்கே அறிமுகமானதிலி ருந்து, தெற்கே கன்னியாகுமரி வரை, மிகத் தெளிவாக அறிமுகமாகி இருந்து இருக் கின்றார். அவருடைய வெள்ளாடை மூடியமேனி பொன்னிற ஒளிவீசிய, மூடிய ஆடைக் குள் இருந்து வெளிப்பட்டமுகம், பாகம், மணிக்கட்டுவரை தெரிந்த கை, வெண்ணீறு ஒளிர்விட்ட நெற்றி. ஊழிப் பெருந்தீயின் சுடர் உமிழ்ந்த பாதி மூடிய கடைக்கண் பார்வை தென்றலின் நளின அசைவு, புயலின் வேகம், மேகம் தவழ்வது போன்ற நடை புன்னகை தவழும் முகம் கனியிலும் மிகுந்த, சுவை மிக்க சொற்கள், யாழின் இனிமை மிக்க குரல் ஒலி, கேட்பாரை மெய் மறக்கச் செய்யும். பாடும் திறன் ......... முதலியவைப் பெற்றிருந்த வடலூர் அருட்பெருஞ்சோதி ஆண்டவர். அருட்கொடை வள்ளல், திருவருட் பிரகாச அருட்பா, கொடை வள்ளல் இராமலிங்க அடிகளார் என்று சித்தர் கருவூரர் வழிவந்த கண்டப்பகோட்டைச் சித்தர் ஏனம்பட்டியார் எனப்படும் ஊ. இராமசாமி பிள்ளை குறிக்கிறார். இவரைப் போல பலரும் வள்ளல் பெரு மானைப் பற்றிய குறிப்புக்களை எழுதிவைத்து இருக்கிறார்கள். செங்கறபட்டு, தென்னாற் -காடு மதுரை, திருச்சி, தஞ்சாவூர், திருநெல்வேலி, கார்காத்த வேளாளர்கள் கருணீக்க வேளாளர்கள், சோழிய வேளாளர்கள், கொடிக்க வேளாளர்கள்.......முதலி -யோர் தங்களுடைய சாதியின் தலைவராக; தங்களின் குலதெய்வமாக; நினைத்துப் போற்றினார்கள். ஐயா, வடலூரில் கொண்டாடிய தைப்பூச விழாவினை மேற்படி மாவட்ட வெள்ளாளர்கள் அனைவரும் தங்களது குலதெய்வ விழாவாகவே நினைத்து கொண்டாடினர். சொல்லப்போனால் தென் தமிழ்நாடு முழுவதும் இருந்து நெல் அறு -வடை செய்து புதுநெல்லில் தயாரித்த புழுங்கல் அரிசியையும், பச்சரிசியையும், எடுத்துக்கொண்டு அவரவர் வசதி வாய்ப்புப்படி தென்னைமரம் உடையவர்கள் தேங் காய்களும், கரும்பு பயிரிட்டவர்கள் வெல்லமும், காணிக்கையாக எடுத்துக் கொண்டு தைப்பூசத்திற்கு பத்து(10) நாட்களுக்கு முன்பே. மாட்டு வண்டிகளில் வடலூர் நோக் கிப் பயணப்பட்டிட்டார்கள். செட்டி நாட்டார்கள் சைவ சமயப்பற்று மிக்கவர்கள் என் -பதால், சிவப்பழமாகத் திகழ்ந்த வள்ளல் பெருமானை மாதப்பூசங்களிலும் கூட தவறா -மல் வந்து வழிபட்டுச் சென்றார்கள். [5-10-1823 முதல் 30-1-1874 முடிய இராமலிங்கர் காலம்]

ஆங்கிலேயர்கள், ஆட்சியைப் பிடிக்க நடத்திய நேர்மையற்ற. நீதியற்ற, கருணையற்ற. ஆட்சி முறைக் கொடூரச் செயல்கள் தலைவிரித்து ஆடிய நேரத்தில் கருணையே வடிவாக, வள்ளல் பெருமான் வாழ்ந்தார் என்பதால்தான் 'கருணையில்லா ஆட்சி கடிது ஒழிக' என்று அரசியலைப் பற்றிக் கூட கருத்து வெளியிட்டார். அதாவது நாட்டு நடப்பில், வடக்கேயிருந்த காசுமீரப் பள்ளத்தாக்கு சிற்றரசர்கள், கங்கைக் -கரை [காரி அரச குடும்பத்தலைவர்]

பரோடா அரச குடும்பத்தார்கள், ஐதராபாத் நிசாம் அரச குடும்பத்தார்கள், தமிழகத்துச் சிற்றரசர்கள், பாளையக்காரர்கள், ஆற்காடு நவாப்புகள், மைசூர் அரச குடும்பத்தார்கள், கேரள நாட்டு அரச குடும்பத்தார்கள்......... முதலிய பல அரச குடும்பத்தார்களும். அருள் நலம் வேண்டி நேரடியாகவே, அருட் கொடை வள்ளல்

பெருந்தகையிடம் இறைஞ்சி, அருளைப்பெற்று உயிர்பெற்று வாழ்ந்தார்கள். அவர்கள்தான் அருட்பேரரசராக இருந்த அருட்பெருஞ்சோதி ஆண்டவரிடம், பொருளுலக ஆட்சியில் உள்ள அரசியல் மோசடிகளையும், கொடுமைகளையும், கடுமை களையும், விளக்கி உரைத்து தங்களுக்கு பாதுகாப்பும், அருளும் வேண்டினார்கள். அவர்களால்தான் அருளுலக சிந்தனைகளிடையே வாழ்ந்த ஐயா, அவர்கள் பொருளுலக சிந்தனைகளையும் பெற வேண்டியிருந்தது.

தொடரும்



# அடுத்த இதழ்-21
# ஆதிசங்கரன்
## சிறப்பிதழ்

**ஞான சித்தன் ஆதிசங்கரன்**

*வெள்ளாடை மேனியான் உச்சிக்குடுமியான்*
*தென்பாண்டித் தமிழன் திருமூலர் குருவழி வாரிசு*
*திருவாசக தேவார சாரம் கண்டோன*
*வடபுலத்துச் சித்தர்நெறி பரப்பியோன*
*தமிழின் இந்துமதத்தைச் சமசுக்கிருத ஹிந்துமதமாக்கியோன்*
*சித்தர் இலக்கியம பிருமணர்பயில வழியமைத்தோன்*
*தென்னக அருட்பேரரசுக்குதவியாக வடபுலத்துஅருட்பேரரசுகண்டோன்*

*எனக் குருபாரம்பரியம் பாராட்டும் இமயமலைச் சாரலில் நிறைவு கொண்ட ஆதிசங்கரரின் உண்மை வரலாறு தொடரும்.*

---

ஓம்

# சுடலைக்காரியே!
# போற்றுகின்றோம்!

—கவிமேகம் இல. க. கணேசன்

*வேம்படிதாள சுடலையிலே*
*வேல்நடும்போது வந்தவளே*
*ஓங்காரம்பாடி பாமாலையை*
*ஓசை முழங்க அணிவித்தோம்!*
*தாம்பூலம் வைத்து பலிகொடுத்து*
*தாயாக விளங்கும் சுடலைக்காரியை*
*நாம் அனைவரும் பூசைகள் செய்தால்*
*நாட்கள் முழுதும் அருள்பொழிவாள்!*

*மூவ்வாறுவயதுள்ள கன்னித்தாயே!*
*முக்கால சுடலையாளும் (இள) அரசி நீயே*
*அவ்வையார் பாடிய பாடலைபோல*
*அடியேனும் பாடுகிறேன் நீ சுடலை ஆள*
*கொவ்வை இதழை செமபவளமாக்கி*
*கொஞ்சி பேசி திரியும் மழலையே*
*கவ்விகொண்டு குட்டிகாக்கும பூனையாக*
*கன்னித்தமிழை காப்பாற்று சுடலைக்காரியே!*